<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>O.S. No.139/2024</u>

2025–ம் ஆண்டு நவம்பர் மாதம் 12–ஆம் நாள் வா.சா.1 சாட்சி திருமதி.ரூபா என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திருமதி.ரூபா | தொழில் : கிளை மேலாளர் |
| த/பெ : ராமசந்திரன் | கிராமம் : புஞ்சை புளியம்பட்டி |
| வயது : | தாலுக்கா : சத்தியமங்கலம் |

<u>வா.சா.1 : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி வங்கி கிளையின் மேலாளர் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

25.12.2018ம் தேதியிட்ட பிரதிவாதி எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் அசல் வா.சா.ஆ.1 ஆகவும், 27.12.2018ம் தேதியிட்ட கடன் அனுமதி குறிப்பாணை அசல் வா.சா.ஆ.2 ஆகவும், 28.12.2018ம் தேதியிட்ட பிரதிவாதி எழுதிக்கொடுத்த கொதுவை ஒப்பந்தம் அசல் வா.சா.ஆ.3 ஆகவும், 28.12.2018ம் தேதியிட்ட பிரதிவாதி

எழுதிக்கொடுத்த உத்தரவாத கடிதம் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், 24.12.2021ம் தேதியிட்ட கடன் பாதுகாப்புக்கான ஒப்புகை கடிதம் அசல் வா.சா.ஆ.5 ஆகவும், 23.11.2023ம் தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் கணக்கு எண்.4370727000013 கணினி நகல் வா.சா.ஆ.6 ஆகவும், 01.12.2023ம் தேதியிட்ட வழக்குரைஞரின் பதிவு தபால் அறிவிப்பு அஞ்சலக ஒப்புகை இரசீது அசல் வா.சா.ஆ.7 ஆகவும், 04.12.2023ம் தேதியிட்ட அஞ்சலக ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.8 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.